RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2142

# சங்க அக இலக்கியத்தில் இல்லம் சார்ந்த புழங்கு பொருள்கள்

## ரெ. நல்லமுத்து [அ,*]

[அ] தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி -620002, தமிழ்நாடு, இந்தியா.

# A Research on Frequently used Products from Sangam Literature

## R. Nallamuthu [a, *]

[a] Department of Tamil, St. Joseph's College, Trichirappalli-620002, Tamil Nadu, India.

* Corresponding Author: nallamuthu.1977@gmail.com

Received: 15-03-2021
Revised: 02-08-2021
Accepted: 11-08-2021
Published: 16-08-2021

Check for updates

## ABSTRACT

As to impoverished men this present world is not: The 'graceless' in you world have neither part nor lot. As the famous poet vazhuvar puts across this thought, we are surrounded and dependenton material possessions in this world. These asserts play a vital role in every stage and every event of our life. The relationship between oneself and the goods is too deep and enigmatic. In no way we withdraw ourselves from these domestic equipments. The materials connected to our everyday life can be tagged domestic products. These asserts help us in understanding and sangam period. On this note, the domestic products and its varieties are widely discussed. The research focuses on differentating these products namely: Domestic things, pottery, jewelleries made of gold, utensils made of stone, iron and bamboo made appliances.

**Keywords:** Urn, Kuzhichi, Nerkudir, Ural, Nigarvelli, Tasumbu, Plunger, Mathu, Trimaram

## முன்னுரை

நம் உணர்வுகள் வாழும் களமாக இப் புழங்கு பொருட்கள் உள்ளன. இவ்வாறு நம்மைச் சுற்றியுள்ள அனைத்துப் பொருள்களிலும் நம் கருத்துகளையும் உணர்வுகளையும் ஏற்றி அவற்றோடு வெவ்வேறு நிலையில் உறவாடுகின்றோம். அக்கால மக்களின் பண்பாட்டை அறிவதற்கு இப் புழங்கு பொருள்கள் நமக்கு உதவுகின்றன. அவ்வகையில் சங்ககால மக்கள் தம் வாழும் இல்லங்களில், பல்வேறு வகையான தொழில்களிலும் அவர்களின் வாழ்க்கைத் தேவைக்காகப் பயன்படுத்திய பொருள்களின் பயன்பாட்டைக் குறித்து இக்கட்டுரை ஆராய்வதாக அமைகிறது.

## புழங்கு பொருள்கள் விளக்கம்

புழங்கு பொருள் என்பது மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய, பயன்படுத்தி வருகின்ற பொருள்களைக் கூறலாம். புழங்கு பொருள் பற்றி பக்தவச்சலபாரதி, பொருளும் பண்பாடும் நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. நறுக்குத் தெறித்தார்போன்று மிகக் குறைந்தபட்ச வரையறையாகச் சொன்னால் பண்பாட்டின் கண்ணாடி, புழங்கு பொருள்கள் என்று கூறலாம். அந்த வகையில் ஒன்றையொன்று இணையிசைவு பிரதிபலிப்பவை. அருங்காட்சியகத்தில் உள்ள பல்வேறு காட்சிக் கூடங்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைக் கொண்டு அப்பொருள் சார்ந்த காலகட்டத்தின்

பண்பாட்டையும் அக்கால கட்டத்தின் வாழ்வியல் முறைகளையும் அறிய இயலும் என்று பக்தவச்சல பாரதி குறிப்பிட்டுள்ளார் (Bhakthavachala Bharathi, 2002). பண்பாட்டை அறிவதற்குப் புழங்கு பொருள்கள் உதவுகின்றன. மக்கள் தங்கள் வாழ்வில் அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களும் புழங்குபொருள்களே ஆகும். புழங்குபொருள்களின் நிலையினை அறியும் போது, நம்மோடு தொடர்புடைய எண்ணற்ற பொருட்கள் மிகவும் அன்னியோன்யமானவை. புழங்குபொருளானது பண்பாட்டில் குறிப்பிட்ட சில வகையான பொருள்கள் அன்றாட வாழ்க்கைச் சார்ந்த சமூகப்தாரச் செயல்பாடுகளுக்கு உதவக்கூடியனவாக ஒப்பனை தன்மையுடையதாக உள்ளன. என்று பக்தவச்சல பாரதி பண்பாட்டு மானிடவியல் என்ற நூலில் வரையறுத்துக் கூறியுள்ளார் (Bhakthavachala Bharathi, 2002).

சங்ககால மக்கள் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் பொருள்களைப் பயன்படுத்தி வாழ்ந்தனர். அவர்கள் பயன்படுத்தியப் பொருட்களில் சில நிலம், தொழில், மற்றும் கலாச்சாரம் போன்றவற்றினால் மாற்றம் அடைந்துள்ளதால் அவற்றை இன்று காண்பது அரிது. அப்பொருள்கள் மண்பாண்டத்தாலும், இரும்பாலும், மரத்தாலும், கல்லாலும் ஆனவை, இப்பொருள்களை அவர்களின் அறிவுநுட்பத்தால் உருவாக்கினர். அவர்கள் புழங்கிய பொருள்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

## புழங்கு பொருள்களின் வகைகள்

சங்ககால மக்கள் தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காகப் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி வாழ்ந்துள்ளனர். அவைகளை 1.இல்லம் சார்ந்த பொருள்கள், 2.தொழில் சார்ந்த பொருள்கள், 3.போர் சார்ந்த பொருள்கள், 4.இசை சார்ந்த பொருள்கள், 5.விளையாட்டு சார்ந்த பொருள்கள், 6.அழகு சார்ந்த பொருள்கள் என்று வகைப்படுத்தலாம். இவற்றில் இல்லம் சார்ந்த புழங்கு பொருள்கள் விளக்கி உரைக்கப்படுகின்றது.

## மண்ணாலான பொருள்கள்

வேகவைத்த உணவு வேகவைக்காத உணவினும் சுவையானது என்பதை மனிதன் உணரத் தொடங்கிய காலம் மண்பாண்டங்களின் இன்றியமையாமையை உணர்ந்த காலம் எனலாம். உலக நாடுகள் அனைத்திலும் மண்பாண்டம் செய்வோர் அதிக அளவில் இருந்தனர். உணவினைச் சமைப்பதற்கும், தானியங்களைச் சேமிப்பதற்கும், நீர் ஊற்றுவதற்கும், கள் வைப்பதற்கும் என பல வடிவங்களில் மண்ணாலான பொருள்களைப் பயன்படுத்தினர். அவற்றில் சிறப்பிடம் பெறுவது பானையாகும். பானை செய்யும் முறைப் பற்றி பானை செய்வதற்கேற்ற மண்ணைத் தேர்ந்தெடுத்து நீர் ஊற்றிப் பிசைந்து ஓரிரு நாட்கள் வைத்திருந்து பின் சக்கரத்தில் வைத்துச் சுழற்றித் தேவைப்படும் வடிவத்தில் கலன்களை உருவாக்குவார்கள் இது இன்றைய முறை. சங்ககாலத்திலும் இம்முறையே பின்பற்றினார்கள். சங்ககாலத்தில் மண்பாண்டம் செய்வதற்குத் தேவையான மண்ணைத் தேர்வு செய்யும்முறை மற்றும் அதனைப் பதப்படுத்தி எவ்வாறு மண்பாண்டங்கள் செய்தனர் என்பதையும் த. சாமிநாதன் விளக்கியுள்ளார் (Saminathan, T, 2013). பானை வனைந்த பின் உலர்த்திச் சாயம் பூசி சூளையிலிட்டுச் சுட்டு கெட்டிப்படுத்தினாலும், மண்பானையைச் சுட்டு பயன்படுத்த வேண்டும் என்று அதன் நுட்பத்தினை அறிந்திருந்தனர். சூளை மிகப் பெரியதாக இருந்திருந்தது. அச்சூளைகளில் எழுகின்ற புகை மலைகள் மறையுமாறு வெண்மழை பொழிந்தமைக்கு உவமையாகக் கூறப்படுகிறது. பிசிராந்தையாரின்

"இலங்குமலை புதைய வெண்மழை கவைஇ

கலஞ்சுடு புகையில் தோன்றும் நாட!"(அகம்.பா.308, பா.வ. 5-6)

என்ற வரிகள் சங்ககாலத்தில் மண்கலன் சூளையிலிட்டமை புலனாகிறது. மண்கலன் சுடும்பொழுது ஏற்பட்ட புகை வானளவு உயர்ந்து மேகத்துடன் கலந்து மலை தெரியாதவாறு புகைமண்டலமாகக் காட்சியளித்தது என்று கூறப்பட்டுள்ளது. மண்பாண்டத்தில் பல வகைகள் இருந்துள்ளன. சங்ககாலத்தில் மக்கள் பயன்படுத்திய கலன்களின் பெயர்கள் பின்வருமாறு: குழிசி, தாழி, பானை, குடம், மோர்ப்பானை, தசும்பு, சாடி, கன்னல், நெற்கூடு போன்றவை ஆகும் (Seyapal, 2004a).

## குழிசி

குழிவான அமைப்புக் கொண்ட பானை குழிசி என்பதாகும். இது களிமண்ணால் செய்யப்பட்டது. மண்பாண்டத்தில் குழிசி என்னும் பெயர் கொண்ட கலன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பொருளாகப் பயன்பட்டதை

"குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்

கயிறுபிணிக் குழிசி ஓலைக் கொண்மார்" (அகம்.ப.77, பா.வ.6-7)

என்ற வரிகளில் மருதனிளநாகனார் பதிவு செய்துள்ளார். ஊர் அவைக்களத் தலைவரைத் தேர்ந்தெடுக்கக் குடவோலை முறை வழக்கிலிருந்த அக்காலத்தில் கயிற்றால் கட்டி முத்திரையிட்ட குடத்தில் பெயர் எழுதிய ஓலை நறுக்கைகளைப் போட்டிருப்பர். தலைவரைத் தேர்ந்தெடுக்க அக்குடத்தின் முத்திரையை நீக்கி குடத்திலிருந்து ஓர் ஓலையை எடுப்பர். அவரே தலைவர் என முடிவு செய்வர். இவ்வாறு தலைவரைத் தேர்வு செய்யும் உதவிப் பொருளாக குழிசி அக்காலத்தில் இருந்தது புலனாகிறது. மண்ணால் செய்த பானையில் வரகரிசி இட்டு நீர் ஊற்றி கற்கள் வைத்த அடுப்பில் உலை ஏற்றினர் என்பதை

"பண்ணை வெண்பழத்து அரிசி ஏய்ப்ப" (அகம்.பா.393-9)

என்ற வரியில் மாமூலனார் சுட்டியுள்ளார். குழிசியைப் பயன்படுத்தி சங்ககால மக்கள் சமைத்தனர் என்பதும் மக்களின் அன்றாடப் புழங்குப் பொருளில் மண்பாண்டங்கள் முக்கியப் பொருளாகப் பயன்பட்டதையும் தெளிவாக அறியமுடிகிறது. மேலும் குழிசியை ஆய்ச்சியர்கள் பால் காய்ச்சப் பயன்படுத்தினர், நாற்றம் போக விளாம்பழத்தைப் பானையில் போட்டனர். இதனை

"விளாம்பழம் கமழும் கமஞ்சூள் குழிசி" (நற்:12:1)

என்ற நற்றிணைப் பாடலில் கயமனாரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குழிசி என்று அழைக்கப்பட்ட மண்கலன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் குடமாகவும், சமையல் செய்யும் பாத்திரமாகவும், பால் காய்ச்சும் பானையாகவும், மக்களின் புழங்கு பொருளாகப் பயன்படுத்தப்பட்டதை அறியலாம் (Balasubramanian, 2004a).

## தாழி

மண்பாண்டத் தொழிலாளர்களின் நுண்ணறிவிற்குத் தாழியைச் சான்று எனலாம். பூச்செடிகள், பருத்திச்செடிகளைச் சங்ககால மக்கள் தாழிகளில் வளர்க்கப்பட்டமை "தாழியும் மலர்பல அணியா" (அகம்:369:5) என்னும் நக்கீரனார் இயற்றிய அகநானூற்றுப் பாடல் வரிகளில் உறுதிப்படுத்துகின்றது. தாழியில் குவளை மலர்ச்செடியை வளர்த்ததை

"தாழிக் குவளை வாடுமலர் சூட்டி"10 (அகம் :165 : 11)

என்ற அகநானூற்றுப் பாடல் வரி சுட்டிக்காட்டுகின்றது. தாழிகள் பெரும்பாலும் பூச்செடிகள் வளர்க்கவே பயன்பட்டிருப்பது மேற்கண்ட சான்றுகளின் வழி தெரியவருகிறது. இன்றும் பூச்செடிகள். காய்கறிச்செடிகள் போன்றவற்றை தாழியில் இட்டு வளர்ப்பதை காணமுடிகிறது. நகர்ப்புற மக்கள் பெரும்பாலும் தாழியைப் பயன்படுத்தி மாடிவீட்டுத் தோட்டத்தில் செடி, கொடிகளை வளர்க்கின்றனர். இன்றையக் காலகட்டத்திலும் இம்மண்பாண்டம் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுள்ள பொருள் எனலாம்.

## பானை

பொருள்களைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்ல பானை பயன்பட்டது. இடையன் ஆநிரையைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லும் போது தமக்குத் தேவைப்படும் பொருள்களான தோல், தோல்படுக்கை, பானை ஆகியவற்றைத் தன் தோளில் மாட்டிய உறியில் தொங்கவிட்டு எடுத்துச் சென்றான்.

"திணைகால் உறியன் பானையன் அதலின்" (அகம் : 274 : 5)

என்ற கயமாரின் அகநானூற்றுப் பாடல்வரி புலப்படுத்துகிறது. இங்கு அதலின் என்பது இடையனைக் குறிக்கும். இடையருக்கு உணவு எடுத்துச் செல்லும் கலனாக பானை பயன்பட்டது தெளிவாகிறது. இன்று

நெகிழி, நிகர்வெள்ளி, பித்தளை எனப் பலவகைகளில் அவரவர் வசதிகளுக்கேற்ப உணவுகளைக் கொண்டு செல்லும் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

## மோர்ப்பானை

மோரினை ஊற்றி வைக்க அக்காலத்தில் தனிப்பானை இருந்துள்ளது. ஆடு, மாடு இவற்றால் கிடைக்கும் பாலினைத் தயிராக்கி அதனைக் கடைந்து மோராக்கி அவற்றைப் பானையில் ஊற்றி தலையில் சுமந்து சென்று ஊரில் உள்ள மக்களுக்கு ஆய்மகள் விற்று வந்த குறிப்புக் கலித்தொகையில்,

"பேர் ஊரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல்

மோரோடு வந்தாள் - தகை கண்டை" (கலி:109:6-7)

என்ற நல்லுருத்திரனாரின் பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ளது. மோரினை எடுத்துச் செல்லும் கலமாக ஆயர்களுக்கு பானை உதவியாக இருந்தது என்பது தெளிவாகிறது (Thatchinamoorthy, 2004).

## தசும்பு

தசும்பு என்பதற்குக் கடம் என்ற பொருள் உண்டு. மண்பாண்டத்தைக் குறிக்கும் மற்றோர் சொல் தசும்பு என்பதாகும். தசும்பினைப் பற்றி

"தசும்பு கடம் கும்பம் குடம்

கன்னல் என்று கருதுவர் புலவர்" (ப.161)

என்று கி.பி.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திவாகர முனிவரால் இயற்றப்பட்ட சுட்டிச்செல்கின்றது (Divakar, 1958). தசும்பினைக் கடம் என்று கூறுவதைக் காணலாம். இதனை முல்லைநில ஆய்ச்சியர் பெரும்பாலும் பயன்படுத்திய பானையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. சுட்டமண்ணால் செய்த தசும்பு என்ற கலத்தில் தயிரில் மத்திட்டுக் கடையும்போது வெண்ணெய் உருண்டைகள் சிதறிக் கிடந்ததை

"சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற

பிறவா வெண்ணெய் உருப்பு இடந்தன்ன" (நற்:84:6-7)

என்ற நற்றிணைப்பாடல் வரிகள் மொழிகின்றன. தயிர் வைக்கும் பொருளாக தசும்பு பயன்பட்டிருப்பது தெளிவாகிறது (Balasubramanian, 2004a).

"ஆய்மகள் தயிர்கொடு வந்த தசும்பு நிறைய" (புறம்:33:3)

என்ற கோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடலடியும் சுட்டுகிறது (Balasubramanian, 2004b).

## நெற்கூடு

நெல்லைச் சேமித்து வைப்பதற்கு நெற்கூடு பயன்பட்டது. இதனை நெடுங்கூடு, தொடுகூடு என்றும் கூறுவர். இக்கூடானது நெல், வரகு, தினை, சாமை, கம்பு முதலான தானியங்களைப் பாதுகாப்பாக வைக்கும் பண்டமாக விளங்கியது.

"செவ்வி சேர்ந்த புள்ளி வெள் அரை

விண்டு பரையம் புணர்நிலை நெடுங்கூட்டப்

பிண்ட நெல்லின் தாய் மனை ஒழிய"(நற்:26:2-4)

என்ற பாடலில் நற்றிணையின் சாத்தந்தையார் நெற்கூட்டில் வைத்திருக்கும் நெல்லின் அளவைக் கொண்டு ஒருவரின் மதிப்பை அளவிட முடியும் என்று குறிப்பிடுகிறார். அதற்கேற்ப தலைவியின் தாய் வீட்டில் கூடு நிரம்பும்படியாக நெல் கொட்டப்பட்டு கிடக்கும், அத்தகைய செல்வமுடையவள் தலைவி என்று தோழி தலைவனிடம் கூறுவதன் மூலம் தலைவியின் செல்வாக்குப் புலப்படுகிறது (Balasubramanian, 2004b)..

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வேளாண்மைத் தொழிலைச் செய்யும் மக்கள் தங்கள் விதைநெல்லையும் ஓராண்டிற்குத் தேவையான பொருளையும் நெற்கூடு என்று சொல்லக் கூடிய குதிர்களில் சேமித்து வைக்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். இன்றும் கிராமப்புறங்களில் வேளாண்மைக்குத் தேவையான பொருள்களை நெற்கூட்டில் சேமித்து வருகின்றனர். அதனால் நெற்கூடு என்று கூறப்படுகின்ற குதிர் மக்களின் புழங்குபொருளாகப் பயன்பட்டு வருவதை அறியலாம். இவ்வாறாக மண்ணால் செய்யப்பட்ட பானை, கடம், சாடி போன்றவை உணவினைச் சமைக்கவும், பூச்செடிகளை வளர்க்கவும், பொருட்களைப் பாதுகாப்பாக வைக்கும் கலமாகவும் மக்களின் புழங்கு பொருளாகப் பயன்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## கல்லாலான பொருட்கள்

மக்களுக்கு இயற்கை அளித்த நன்கொடை கல். தொடக்ககால மனிதன் கற்களைக் கொண்டு வேட்டையாடினான். தனக்குத் தேவையான பொருள்கள் சமைப்பதற்கு நெருப்பினைக் கண்டுபிடித்தான். சிற்பங்களை செதுக்கினான், ஓவியங்களை வரைந்தான் பண்டைக்கால மக்கள் கல்லினைக் கொண்டு வீடுகளையும், சிற்பங்களையும் உருவாக்கினர். கல்லாலான பொருட்களுக்கு ஆயுள் அதிகம் என்பதை உணர்ந்து கற்களினால் பல பொருட்களைச் செய்து பயன்படுத்தினர்.

## உரல்

சங்ககால மக்கள் கற்களினால் ஆன புழங்கு பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனர். வயல்களில் விளைந்த தானியங்களைக் குற்றுவதற்குக் கல்லாலான உரல் பயன்பட்டது. கபிலர் தோழி கூற்றின் வாயிலாகக் குறிப்பிடுகிறார். இதனை,

“ஆடுகழை நெல்லை அறை உரலுள் பெய்திருவோம்”(கலி:41:3)

என்ற கலித்தொகைப் பாடலடி சுட்டுகிறது. நெல்லைக் குற்றுவதற்கு உரல் பயன்பட்டது என்பது தெளிவாகிறது. இல்லம் சார்ந்த பொருள்களில் கல்லாலான உரல் மட்டுமே அதிக அளவில் பயன்பாட்டிலிருந்தது மற்றவை குறித்த செய்திகள் அறியப்படவில்லை.

“ஐவன வெண்ணெல் அரையுரலுட் பெய்திருவாம்” (கலி.43:4)

என்ற நல்லந்துவனாரின் கலித்தொகைப் பாடல்வரி வெண்நெல்லைக் குற்றுவதற்கு உரல் பயன்பட்டது என்பதைப் பதிவு செய்துள்ளது. இன்றும் கிராமப்புறங்களில் உரலினை தானியங்கள் குற்றுவதற்கு இல்லங்களில், குறிப்பாக குடிசை வீடுகளில் தரையின் மையத்தில் வைத்துள்ளனர். சமைப்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களை ஆட்டுவதற்கு ஆட்டுக்கல்லில் ஆட்டி பயன்படுத்தினர். மேலும் கேழ்வரகு அரைப்பதற்கும் கல்லினைப் பயன்படுத்தினர் (Visvanathan, 2004).

## மரத்தாலான புழங்குபொருள்கள்

பழங்கால மக்கள் மரத்தாலான பொருள்களைத் தம் இல்லங்களில் பயன்படுத்தியுள்ளனர். அகில், தேக்கு. சந்தனம் ஆகிய மரங்களால் தமக்குத் தேவையான பலவித பொருள்களை உருவாக்கியுள்ளனர். உரல், உலக்கை, மத்து, திரிமரம் ஆகிய மரத்தாலான பொருள்களை சங்கால மக்கள் புழங்கு பொருளாகப் பயன்படுத்தி உள்ளதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்

## உலக்கை

நெல், வரகு, சாமை, தினை, கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானிய வகைகளை உரலில் இட்டுக் குற்றுவதற்கு உலக்கை பயன்படுகிறது. உலக்கையைச் சந்தன மரத்தால் செய்து அக்கால மக்கள் பயன்படுத்தியதை

“சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்” (கலி:43:3)

என்ற நல்லந்துவனாரின் கலித்தொகை வரியின் வழி அறியமுடிகின்றது. நெல் குற்றுவதற்கு மட்டுமின்றி அவல் இடிப்பதற்கும் உலக்கை பயன்படுத்தியதை

"பாசவல் இடிந்த கருங்கா ழுலக்கை"(குறு.238:1)

என்ற குன்றியனாரின் குறுந்தொகை வரியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நெல், அவல் இடிப்பதற்கு உலக்கை பயன்பட்டிருப்பது விளங்குகிறது. இன்றும் கிராமப்புறங்களில் சில இடங்களில் உலக்கையினால் கம்பு, அரிசி, சோளம் போன்ற தானியங்களைக் குற்றி வருகின்றனர். இயந்திர வகையினால் நெல் முதலிய தானிய வகைகள் அரைத்தாலும் உலக்கையினால் தீட்டி தூய்மைப்படுத்தி உண்ணும் பொழுது அதன் சுவை அதிகமாக இருக்கும். உடலுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாது. காலதாமதத்தைக் கருத்தில் கொண்டு எல்லாம் இயந்திரமாகி வருகின்ற இன்றையச் சூழலில் அக்கால மக்களின் வலிமை, சுறுசுறுப்பு இன்று இல்லை எனலாம். மனிதன் பிறக்கும் முன் தொடங்கும் சடங்கு மனிதன் இறந்தப்பின்பும் தொடர்கின்றது. கிராமப்புறங்களில் ஒரு மனிதன் இறந்தப்பின்பு சடங்குகள் செய்து உடலை அடக்கம் செய்வது வழக்கம். அவ்வாறு சடங்குகள் செய்வதில் உலக்கை முக்கிய சடங்குப் பொருளாக இருந்து வருகிறது. இறந்தவரின் தலையில் உலக்கை வைத்து சாமிக் கும்பிடுவர். இறந்தவரை இடுகாட்டில் புதைத்ததும் அவருடைய மகனின் கடமைகள் முடிந்ததும், வீட்டிற்கு வரும்போது வாசலில் சாணம், உலக்கை, தண்ணீர் பாத்திரம் இருக்கும் சாணத்தில் காலை அழுத்தி, நீரில் காலை கழுவிய பின்பு, உலக்கையைத் தாண்டி வீட்டிற்குச் செல்வது முக்கிய சடங்காக இருந்து வருகிறது. சங்ககாலம் தொடங்கி இன்றுவரை தமிழர்கள் சடங்குகளில் நம்பிக்கைக் கொண்டு வாழ்கின்றனர். அதில் உலக்கை சடங்குப்பொருளில் ஒன்றாக இருக்கிறது. தமிழர்களின் திருவிழா தைப்பொங்கல். இதில் மூன்றாம் நாள் நிகழ்வாக மாடுகளை வணங்கும் விழா நடைபெறுகிறது. அந்நாளில் மாட்டைப் பட்டியில் இருந்து அவிழ்த்து வரும் போது, உலக்கை வீட்டு வாசலில் போட்டுருப்பர். மாடு உலக்கையைத் தாண்டி வரும் சடங்கும் ஒன்றாக இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது.

## மத்து

தயிர் கடைவதற்குப் பயன்படும் பொருள் மத்து. இது மரத்தால் செய்யப்பட்டிருக்கும். சங்ககால மக்களில் ஆயர்களால் அதிகம் பயன்படுத்தப்பட்ட பொருள் மத்து எனலாம். திரண்ட தண்டுடைய மத்து தயிர் கடையப் பயன்பட்டது என்று அகநானூற்றில்,

"தீம்தயிர் கடைந்த திரள் கால் மத்தம்"(அகம்.87:1)

என்ற வரியில் மதுரைப் பேராலவாயார் குறிப்பிடுகின்றார். நற்றிணையில் கயமனார் தயிர்ப் பானையில் தயிர் கடைந்ததால் மத்தானது தேய்ந்து காணப்பட்டது என்கிறார் இதனை,

"பாசந் தின்ற தேய்கான் மத்த

நெய்தெரி யியக்கம் வெளில்முதல் முழங்கும்"(பாலை.12:2-3)

என்னும் கயமனாரின் பாடல்வரி மெய்ப்பிக்கின்றது. வெண்ணெயை வெளிக்கொணரும் மத்தினை மழவர்கள் கவர்ந்து சென்றதை

"நுரை தெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து"(பாலை.101:8)

என்ற மாமூலனாரின் பாடல் வரி உறுதிப்படுத்துகின்றது. இதன் மூலம் தயிர்க்கடையும் கருவியாக மத்து பயன்பட்டிருப்பது புலனாகிறது. இன்றும் மத்து பெரும்பாலான இல்லங்களில் புழங்கு பொருளாகத் தயிர் கடைவதற்கும் பருப்பு கடைவதற்கும் பயன்பட்டு வருவதைக் காணமுடிகிறது

## திரிமரம்

மாவரைக்கும் கருவியாக திரிமரம் சங்ககாலத்தில் பயன்பட்டது. மரத்தால் செய்யப்பெற்றது உறுதியானது பெரிய வடிவிலானது. பதமாகக் காய்ந்த அரிசியினைத் திரிகையில் இட்டுத் திருகியதை அகநானூற்றில் பெருந்தலைச் சாத்தனாரின்,

"ஐதுஉணங்கு வல்சி பெய்துமுறுக்கு உறுத்த

திரிமரக் குரல்இசை கடப்ப வரிமணல்

அலங்கு கதிர் திகிரி ஆழி போழ,"(அகம்.224:12–14)

என்ற பாடல் வரிகள் உறுதிப்படுத்துகின்றது. திரிகையில் இட்டு சுழற்றினால் அரிசி பொடியாகும். இதன் மூலம் அரிசி அரைக்கும் கருவியாக திரிகை விளங்கியதை அறியமுடிகிறது.

## இரும்பினாலான பொருள்கள்

உலோகங்களில் உறுதியானது இரும்பு. பழங்கால மக்கள் இரும்பினைக் கொண்டு தங்களுக்குத் தேவையான பொருட்களை செய்து கொண்டனர். தம் இல்லங்களில் அவற்றைப் பயன்படுத்தியதை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. இரும்பாலான விளக்கு, கத்தரிக்கோல், உரி போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

## விளக்கு

இரவு நேரங்களில் வெளிச்சத்திற்காக இரும்பால் செய்யப்பெற்ற விளக்கைப் பயன்படுத்தினர். மின்சாரம் இல்லாத அக்காலத்தில் அனைத்து இல்லங்களிலும் மண் மற்றும் இரும்பால் செய்யப்பட்ட விளக்குகள் இருந்துள்ளது. பகலைப்போல் ஒளிதரும் விளக்கை அக்கால மக்கள் வீட்டில் வைத்திருந்ததை

"பகல் கொள் விளக்கொடு இராநாள் அறியா"(ஐங்:56:1)

என்ற ஐங்குறுநூற்றில் ஓரம்போகியார் பதிவு செய்யதுள்ளார். இதேபோன்று பரதவர்கள் வீட்டிலிருந்து கடலுக்கு வேட்டையாடச் செல்லும்போது விளக்குகளை எடுத்துக்கொண்டு செல்வது அவர்கள் வழக்கம் இதனை,

"திண் திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ

நடுநாள் வேட்டம் போகி"(நற்.388:4-5)

என்று பெருங்கண்ணனாரின் நற்றிணைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மீன்களை வேட்டையாடச் செல்பவர்கள் இரவில் சென்று காலையில் வருவர். விளக்கானது அவர்களுக்கு உறுதுணையாக வெளிச்சத்தை உண்டாக்கியது. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து நிகழ்வுகளிலும் விளக்கின் பயன்பாடு இருந்துள்ளன. விளக்குகள் பலவகை, அதில் காமாட்சி விளக்கு புனிதமானது. குத்துவிளக்கு, பாவை விளக்கு, வாடா விளக்கு, தூக்கு விளக்கு, தூண்டாமணி விளக்கு, நந்தா விளக்கு, கூண்டு விளக்கு, புறா விளக்கு, சங்கிலித் தூக்கு விளக்கு, கிளித்தூக்கு விளக்கு என்று இக்காலத்தில் பயன்படுத்துகின்ற விளக்குகள் எண்ணற்றவை. மனிதன் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் விளக்குகளை தங்களின் இல்லங்களிலும், கோயில்களிலும், பிற இடங்களிலும் பயன்படுத்தியுள்ளதை இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது

## எஃகு

பழங்கால மக்கள் மரத்தாலான பொருள்களைத் தம் இல்லங்களில் பயன்படுத்தியுள்ளனர். அகில், தேக்கு. சந்தனம் ஆகிய மரங்களால் தமக்குத் தேவையான பலவித பொருள்களை உருவாக்கியுள்ளனர். உரல், உலக்கை, மத்து, திரிமரம் ஆகிய மரத்தாலான பொருள்களை சங்கால மக்கள் புழங்கு பொருளாகப் பயன்படுத்தி உள்ளதை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்

## ஊசி

இரும்பால் செய்யப்பட்ட கூர்மையான கருவி ஊசி. சிறு துளையுடன் உள்ள மெல்லிய கருவி ஊசியாகும். சங்ககால மக்கள் பூக்களைக் கோர்த்து மாலையாக்க ஊசியைப் பயன்படுத்தினர். இதனை,

"ஒண் செய்கழுநீர்க் குண்போல ஆம்இதழ்

ஊசி போகிய சூழ் செய் மாலையன்"(அகம்.48:8-9)

என்று முடக்கொற்றனார் அகப்பாடலில் கூறியுள்ளார். செழுமையான செங்கழுநீர்ப் பூக்களை ஊசியில் கோர்த்து மாலையாக்கி அதனை தம் மார்பில் தலைவன் அணிந்திருந்தான். இன்றும் பூக்களை ஊசியில் கோர்த்து அணியும் வழக்கம் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

## மூங்கிலினாலான பொருட்கள்

அக்கால மக்கள் மூங்கிலைக் கொண்டும் தம் இல்லங்களுக்குத் தேவையான பொருட்களைச் செய்தனர். மூங்கிலின் தன்மைக்கேற்ப பொருளானது அமையும். மூங்கிலினால் ஏணி, முறம் போன்றவற்றைச் செய்தனர் என்பதை இலக்கியங்கள் கூறுகிறது.

## ஏணி

உயரமாக இருக்கும் பொருள்களை எடுப்பதற்கு உதவும் ஒரு கருவி ஏணி. குறிஞ்சி நில மக்கள் மரத்தின் மீதுள்ள தேன் கூட்டிலிருந்து தேனை எடுக்க ஏணியைப் பயன்படுத்தினர். இந்த ஏணியானது மூங்கிலின் ஒவ்வொரு கண்ணிலும் கால் வைத்து ஏறும்படி ஒழுங்கு செய்யப்பட்ட கண்ணேணி எனலாம். கானவர் இந்த ஏணியில் ஏறி தேன் கூட்டினை அழித்து, தேன் எடுத்தனர் என்பதை,

“தேனின் இறால் என ஏணி இழைத்திருக்கும்

கான் அகல் நாடன் மகன்”(கலி.39:9-10)

என்ற குறிஞ்சிக் கலிப்பாடலில், கபிலர் ஏணி இழைத்திருக்கும் நுட்பத்தினை சுட்டுகிறார். ஏணி சரியான, வலிமையான நிலையில் இல்லையெனில் உடலுக்கு தீங்கு ஏற்படும் என்பதை குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தலைவன் பொருள் தேடச் செல்லும் போது தலைவியைப் பிரிந்து சில தூரம் சென்று திரும்பி வருவாய் என்கிறாள்.

“பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்

பறியா தேறியா மடவோன் போல”(குறு.273:5-6)

அறிவில்லாத ஒருவன் தேனிறாலைப் பெறுவதற்கு பழைய கண்ணேணியிலே ஏறிவிட்டு அதன் தன்மையை உணர்ந்து அது உடைந்துவிடும் என்று அஞ்சி கீழே இறங்குவான். அறிவுடையவன் இத்தகைய செயலை செய்யமாட்டான். அதுபோல நீ பொருள் தேட சில தூரம் சென்று திரும்புவாய். அறிவில்லாதவன் போல நீயும் நடக்கிறாய் என்று தோழி தலைவனுக்கு அறிவுறுத்தும் போது, ஏணியைக் காட்டிக் கூறுவதைச் சிறைக்குடி யாந்தையார் பாடல் வழி அறியமுடிகிறது. கண்ணேணியை குறவர்களே அதிகம் பயன்படுத்தியது வெளிப்படையாகிறது. இன்றைய காலத்திலும் மக்கள் பரண் மீதுள்ள பொருளை எடுக்கவும், மரம் மீது ஏறவும் ஏணியைப் பயன்படுத்தினர்.

## முறம்

வேளாண் தொழிலைச் செய்யும் மக்கள் தானியங்களைப் புடைக்கவும் தூற்றவும் பயன்படுவது முறமாகும். மூங்கிலால் செய்யப்பெற்ற முறத்தை அக்கால மக்கள் பயன்படுத்தினர் சுளகு என்றும் கூறுவர்.

“சுழல்மரம் சொலித்த சுளகுஅலை வெண்சாழ்”(அகம்.393:10)

என்ற மாமூலனாரின் அகநானூற்றுப் பாடல் வரகினைத் தீட்டி அதனை முறத்தால் புடைத்ததைத் தெரிவிக்கிறது. தானியங்களில் உள்ள கல், உமி, தவிடு, மண் போன்ற குப்பைகளை நீக்க இன்றும் முறத்தைக் கொண்டு புடைப்பது மக்களின் வழக்கத்தில் உள்ளது. உமி, புழுக்கல், தேவையில்லாத தூசி போன்றவை புடைத்தலினால் நீங்கும். இன்றைய காலத்தில் நெகிழியினாலும் முறம் காணப்படுகிறது. தெள்ளுதல், நாவுதல், புடைத்தல், கொழித்தல் முதலியன அரிசி ஆக்கும் மகளிர் முறச்செயல்கள் ஆகும். குறுநொய்யையும், மணியையும் பிரிக்கத் தெள்ளுவர். தெள்ளுங்கால் முறத்தின் முகப்பு மேலே தூக்கியிருக்கும். இதனை ஏணம் என்றும், தெள்ளேணம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஒரு தமிழ்ப்பெண்மணி நெல் தூற்றிக்கொண்டிருக்கும் போது புலி ஒன்று தாக்க வந்ததாகவும், அந்த மங்கை புலிக்கு அஞ்சாமல்

முறத்தைக் கொண்டே விரட்டியதாகவும் பழங்கதை ஒன்று உரைக்கின்றது. அதற்குச் சான்றாக, தமிழக அரசு மாமல்லபுரத்தில் வீரமங்கைக்குச் சிற்பம் ஒன்றை நிறுவப்பட்டுள்ளதை இன்று நாம் காணமுடிகிறது.

## பொன்னாலான பொருள்கள்

சங்ககால மக்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களாலான பொருட்களைத் தம் இல்லங்களில் வைத்துள்ளனர். பொன்னாலான பொற்கிண்ணங்கள் குழந்தைகளுக்குப் பால் ஊற்றும் கலனாகப் பயன்படுத்தியதோடு கிளிக்கும் அக்கிண்ணத்திலே பால் ஊற்றியதை,

"சேடு இயல் வள்ளத்துப் பெய்த பால் சில காட்டி

ஊடும் மென் சிறுகிளி உணர்ப்பவர் முகம் போல"(கலி.72:3-4)

என்ற மருதன் இளநாகனாரின் கலித்தொகைப் பாடல் சுட்டுகிறது. இதன் மூலம் தமிழர்களின் செல்வச் செழிப்பு புலப்படுகிறது.

"உண் என்று ஓக்குபு பிழைப்ப தெண் நீர்

முத்து அரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று

அரிநரைக் கூந்தர் செம்முது செவிலியர்"(நற்.110:4-6)

என்ற போதனாரின் பாடல் வரிகள் மெய்ப்பிக்கின்றது. தலைவி அவள் விரும்பிய தலைவனோடு சென்றுவிடுகிறாள். அவனது குடும்பம் மிகவும் ஏழ்மையானது, இருப்பினும் தலைவி ஒரு நேரம் உண்டும், ஒரு பொழுது உண்ணாமலும் வாழ்கிறாள். இதைக் கேள்விப்பட்ட நற்றாய் வருந்துகிறாள். இத்தகைய ஒழுக்கம் எங்கிருந்து வந்தது என்று செவிலித்தாய் புலம்புகிறாள் தம் வீட்டில் இருக்கும் பொன் கிண்ணத்தில் பால், தேன் கலந்த உணவை ஊட்டும் பொழுது உண்ணாமல் ஓடுகிறாள் தலைவி. அப்பொழுது பூவொத்த சிறுதடியில் அடித்ததை செவிலியிடம் நற்றாய் நினைவு கூர்வதன் மூலம், அவளது வீட்டின் செல்வச் செழிப்பும் தலைவன் வீட்டில் உள்ள வறுமையை மறந்து மகிழ்ச்சியாக வாழ்கின்றாள் என்பதன் மூலம் இல்லறப்பாங்கு என்பது தம் இல்லத்திலிருந்து வந்துள்ளதை நற்றாய் உணர்வதாக, இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

பால் ஊற்றும் கிண்ணமாகவே பொற்கிண்ணம், வள்ளிகிண்ணம் அக்காலத்தில் இருந்தது தெரிகிறது. மேலும் குறுந்தொகையிலும் தலைவியின் இல்லறச் சிறப்பு இடம்பெறுகிறது. செவிலி தன் மகளுக்குச் செம்பொன்னாலாகிய பாத்திரத்தில் பொரியோடு கலந்த பாலை உண்ணச் செய்யும்பொழுது அவள் வேண்டாம் என்று உண்ணாமல் செல்கிறாள். இத்தகைய செல்வம் நிரம்பிய வீட்டுடைய தலைவி பாலை நிலத்தில் தலைவனொடு கால் நோக சென்றுவிட்டாளே என்று புலம்பும்போது அவளது அன்பும் தலைவியின் மென்மையும் தெரியவருகிறது. இதனை

"செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த

பாலும் பலவென வுண்ணாள்"(குறு.356:5-6)

என்ற கயமனாரின் குறுந்தொகைப் பாடல் பதிவு செய்கிறது. தலைவி உண்ணும் கலனாக செம்பொற்கிண்ணம் இருந்தது தெளிவாகிறது. இன்றும் அவரவர் வசதிக்கேற்ப இல்லங்களில் பல பொருள்களாலான கிண்ணங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

## முடிவுரை

சங்ககால மக்கள் தங்களுடைய இல்லற வாழ்க்கைக்குப் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி செழுமையான வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்களுடைய அன்றாடத் தேவைகளுக்குப் பல்வேறு புழங்குபொருட்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மண், இரும்பு, மரம், உலோகத்தாலான பொருள்களை தங்கள் இல்லங்களில் பயன்படுத்தி செம்மையுற வாழ்ந்தனர் என்பதை மேற்கண்ட சான்றுகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. இவ்ஆய்வுக் கட்டுரையின் வழி வரும் காலங்களில் மனிதர்கள்

தங்களுடைய இல்லங்களில் அன்றாடம் பயன்படுத்தும் புழங்கு பொருள்கள் குறித்த விடயங்களை அறிந்துகொள்ளுதல். இதனின் கண் மீளாய்வு நடத்திட வழிவகை செய்திடவும் ஏதுவாக இவ்ஆய்வு அமைகிறது.

## References

Balasubramanian, Ku. Ve., (2004a) Natrinai, New Century Book House, Chennai, India.

Balasubramanian, Ku. Ve., (2004A) Purananuru, New Century Book House, Chennai, India.

Bhakthavachala Bharathi, (2002) Tamilar Manidaviyal, Adaiyalam Publications, Trichy, India.

Divakar, (1958) Senthan Divakaram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Saminathan, T, (2013) Sanga Kalath Tholilnuitpam, Annam Pathippagam, Thanjavur, India.

Seyapal, Ira., (2004) Akananuru, New Century Book House, Chennai, India.

Thatchinamoorthy, A., (2004) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Visvanathan (2004) Kalittokai, New Century Book House, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License